# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 03.08.2026

## முன்னிலை

### முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)

### மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 3614/SCIC/2026**

திரு.T. சிகாமணி - மேல்முறையீட்டாளர்
எண்.2197, துரைசாமி தெரு
விருபாட்சிபுரம் அஞ்சல்
வேலூர் வட்டம் (ம) மாவட்டம்-632 002.
Phone:96002 38548.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
வேலூர் - 632 001.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **18.08.2025** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 03.09.2025 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 06.10.2025 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 10.11.2025 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 05.02.2026 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 18/08/2025 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), வேலூர் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பி, அதில் "பார்வை-1 புகார் மனு நாள் 18/06/2024 மற்றும் 02/05/2024 அளிக்கப்பட்ட மனுக்கள் மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), வேலூர் உள்ளிட்ட இரண்டு - தொடர்பாக - பார்வை-2-ல் கண்ட மாவட்ட பதிவாளர் அவர்களின் ஆணை மற்றும் அது தொடர்பான அறிக்கை. என் மனு தொடர்பான தகவல்கள் மற்றும் மேற்படி

கோப்பு தொடர்பான ஆவணங்கள் கோப்பு குறிப்புகளுடன் சான்றிட்ட நகல் கோரப்படுகிறது" என்பன போன்று 5 (ஐந்து) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.T.சிகாமணி அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.மு.ராஜா, மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்), வேலூர் மாவட்டம் அவர்கள் ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு 03/09/2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக ஒரு பக்கத்திற்கு ரூ.20/- வீதம் கட்டணம் செலுத்த வேண்டுமென்று பதில் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், 06/10/2025 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவினை அனுப்பி அதில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி ஒரு பக்கத்திற்கு ரூ.2/- வீதம் மட்டுமே கட்டணம் வசூலிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார். மேலும், மேல்முறையீட்டு அலுவலர் 10/11/2025 தேதியிட்டு அளித்துள்ள பதிலில், பொதுத் தகவல் அலுவலர் அளித்த பதிலில், பதிவுத்துறைத் தலைவர் பிறப்பித்துள்ள சுற்றறிக்கை எண்.40/09/C4, Dt.01-10-2009-னை மேற்கோள் காட்டியுள்ளார். மேலும், பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்படி சங்க பதிவு சட்டத்தின் கீழ் கட்டணம் செலுத்தி தகவல் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துள்ளார். **பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்), வேலூர் மாவட்டம் அவர்கள் மேற்சொன்ன பதிவுத்துறைத் தலைவர் பிறப்பித்துள்ள சுற்றறிக்கை எண்.40/09/C4, Dt.01-10-2009-ன் நகலினை முகப்புக் கடிதத்துடன் (Covering Letter) மனுதாரருக்கு விரைவு அஞ்சல் வாயிலாக 31/08/2026-க்குள் அனுப்பி வைப்பதோடு, மனுதாரருக்கு அனுப்பி வைத்த தகவலின் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மனுதாரர், தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கும் வகையில், ஆணையம் மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பியிருந்தும், மனுதாரர் இன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**வழக்கு எண். SA 3614/SCIC/2026**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்டப் பதிவாளர் (நிருவாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
வேலூர் - 632 001.

மேல்முறையீட்டாளர்

திரு.T. சிகாமணி
எண்.2197, துரைசாமி தெரு
விருபாட்சிபுரம் அஞ்சல்
வேலூர் வட்டம் (ம) மாவட்டம்-632 002.
Phone:96002 38548.

RG/Sr.PC